தலைமைப்பொறியாளர், (கட்டடம்), பொபது., மதுரை மண்டலம், மதுரை அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: பொறி. ஜெ.ரபீந்தர், எம்.இ., எம்.பி.ஏ.,
தலைமைப்பொறியாளர், கட்டடம் பொபது.,

செயல்முறை ஆணை எண்: பி(1) /1346 /2019/ நாள்:30.04.2019.

அய்யா,

பொருள்: நியமனம் (நேரடி) - த.நா. அமைச்சுப் பணித் தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு தொகுதி-IVல் அடங்கிய 2015-2016 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.மு.மோகன தங்க முனீஸ்வரி, இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்தது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்ககுதல் - தொடர்பாக.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண். 1150/பிஎஸ்டிஎச்-2/2019/நாள்.18.02.2019.

2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து.(ம) தலைமைப்பொறியாளர், (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செ.மு.ஆணை எண்.எஸ்3(3)/ 25366/2019-1/ நாள்.25.02.2019.

3.இவ்வலுவலக செ.மு.ஆணை எண் நி2(1)/1346/2019(1384)/ நாள்.07.03.2019.

------

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித்தின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி-IV ல் அடங்கிய 2015-2016 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து.(ம) தலைமைப்பொறியாளர், (பொது), பொபது., சேப்பாக்கம் சென்னை அவர்களால் இம்மண்டல அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.மு.மோகன தங்க முனீஸ்வரி, இளநிலை உதவியாளருக்கு பார்வை (3)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை கடிதம் மூலம் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு 08.03.2019 பி.ப. முதல் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

(த.பி.பா)

இவரது பணி தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் இளநிலை உதவியாளர் பதவியில் 08.03.2019 பி.ப. முதல் தமிழ்நாடு அரசு சார்நிலை பணிகளுக்கான பொது விதிகளில் விதி எண்.23 (ஏ) (1)-ன்படி தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம்-2016 பிரிவு எண் 7(5)ன்படியும், அன்னார் பணியேற்ற 08.03.2019 பி.ப. முதல் பணிவரன்முறை செய்தும் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை நாளான 08.03.2019 பிப முதல் இவரது தகுதிகாண் பருவகாலம் தொடங்கி மூன்றாண்டு தொடர் பணியின் இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இவரது பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

10/5/19

தலைமைப்பொறியாளர்(கட்டடம்)பொபது.,சார்பில்
மதுரை மண்டலம், மதுரை 2.

10.5.19

பெறுநர்

திருமதி.மு.மோகன தங்க முனீஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
தலைமைப்பொறியாளர் அலுவலகம், பொபது.,
(கட்டடம்) மதுரை மண்டலம், மதுரை.

நகல்:நி1(4) உதவியாளருக்கு
நகல்: பணிப்பதிவேட்டிற்கு